# 21 வயதிற்குக் குறைந்த இளைஞர்களுக்கான விரைவார்ந்த ஈடுபாடு திட்டம் (EE21)



# 21 வயதிற்குக் குறைந்த இளைஞர்களுக்கான விரைவார்ந்த ஈடுபாடு திட்டம் (EE21)

## 21 வயதிற்குக் குறைந்த இளைஞர்களுக்கான விரைவார்ந்த ஈடுபாடு திட்டம் (EE21) என்றால் என்ன?

21 வயதிற்குக் குறைந்த இளைஞர்களுக்கான விரைவார்ந்த ஈடுபாடு திட்டம், நீதிமன்ற முதல் அறிவிப்பு நாளுக்கும் தண்டனை விதிப்பு நாளுக்கும் இடையிலான காலக்கட்டத்திலேயே இளைஞர்களுடன் ஈடுபாடுகொண்டு, இளைய குற்றவாளிகளுக்கான நீதிமன்றங்களின் மறுவாழ்வு முயற்சிகளை மேல்நோக்கி எடுத்துச் செல்ல விழைகிறது.

இக்கட்டம் காலதாமதமாகலாம் என்பதால், இச்சமயத்தில், இவ்விளைய குற்றவாளிகள் அர்த்தமுள்ள வகையில் ஈடுப்படுத்தப்படுவது அவர்களுக்குப் பயனுள்ளதாக அமையும். இளையரின் தேவைகள் மதிப்பிடப்படும், மற்றும் இத்தேவைகளை மேற்கொள்ள பொருத்தமான அரசாங்க முகமைகளுக்கும் இலாப நோக்கமற்ற நிறுவனங்களுக்கும் பரிந்துரைகள் செய்யப்படலாம். அவர்களின் நீதிமன்ற வழக்கு முடிவடையும் வரை நிபுணத்துவ சேவைகளுக்கான மையம் அவர்களின் முன்னேற்றத்தை மேற்பார்வையிடும்.

மேல் விவரங்களுக்குத், தயவு செய்து அரசு நீதிமன்றங்களின் நிபுணத்துவ சேவைகளுக்கான மையத்தைத் தொடர்பு கொள்ளுங்கள்.





## இதிலிருந்து எனக்கு என்ன கிடைக்கும்?



### சமூக ஆதரவு மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகளில் ஈடுபடுதல்

விளையாட்டு மற்றும் இதர பொழுதுபோக்கு நடவடிக்கைகளில் ஆர்வமுள்ள இளையர்களுக்கு.

### வீடமைப்பு உதவி

இளைஞர் குடியிருப்பு இல்லங்களில் தற்காலிகமாக தங்குவதற்கு இடம் தேவைபடும் இளைஞர்களுக்கு.





### நிதி உதவி

நிதி ஆதரவு தேவைப்படும் இளைஞர்களுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும்.

### கல்வி ஆதரவு

தங்கள் கல்வியைத் தொடர ஆர்வமுள்ள இளைஞர்களுக்கு.





### தொழிற்கல்வி பயிற்சி

குறுகிய கால திறன் பயிற்சி வகுப்புகளில் கலந்துக்கொள்ள ஆர்வமுள்ள இளைஞர்களுக்கு.

## எனவே, நான் கலந்து கொள்ளலாமா?

ஆமாம் முடியும், நீங்கள்...

> 21 வயதிற்குக் குறைவாக இருந்தால்

> பொருத்தமான அமைப்புகள் உங்களைத் தொடர்புகொள்ளவும் அந்த பொருத்தமான அமைப்புகளால் விதிக்கப்பட்டிருக்கும் விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் பின்பற்றவும் நீங்கள் சம்மதித்தால்

> நீதிமன்ற ஆலோசகரோடு அடிக்கடி சந்திக்க சம்மதித்தால்

> இது சொந்த விருப்பத்தின் அடிப்படையிலான ஒரு நடைமுறை என்பதால், விரும்பி இந்த திட்டத்தில் கலந்துகொள்ள தயாராக இருந்தால்

> நீதிமன்ற ஆலோசகரால் தேவை என்று கருதப்படும் இதர மதிப்பீட்டு தகுதி வரம்பைப் பூர்த்தி செய்தால்.

**உங்களுக்கு ஆர்வம் இருந்தால், தயவுசெய்து அரசு நீதிமன்றங்களின் நிபுணத்துவ சேவைகளுக்கான மையத்தைத் தொடர்பு கொள்ளுங்கள்.**

**அரசு நீதிமன்றங்கள்**
1 ஹெவ்லாக் சதுக்கம், தளம் 18, சிங்கப்பூர் 059724

SC_CENTRE_FOR_SPECIALIST_SVCS@JUDICIARY.GOV.SG

6 JUSTICE (65878423)



## அரசு நீதிமன்றங்களின் நிபுணத்துவ சேவைகளுக்கான மையம்

நிபுணத்துவ சேவைகளுக்கான மையம் (CSS), மனோதத்துவ நிபுணர்கள், ஆலோசகர்கள், சமூக சேவையாளர்கள் மற்றும் இதர நிர்வாக ஊழியர்களைக் கொண்ட ஒரு குழுவை உள்ளடக்கும். நீதிமன்ற பயனர்களுக்கு மதிப்பீடும் பரிந்துரைகளும் வழங்குவதற்கு CSS, அரசு நீதிமன்றங்களுக்கு ஆதரவளித்து, நீதிமன்ற திட்டங்களை நிர்வகிப்பதையும் மேற்கொள்கிறது. நீதிமன்ற பயனர்களுக்கும் அவர்களின் குறிப்பிட்ட தேவைகளுக்கும் ஆதரவு அளித்து உதவ, சிங்கப்பூரில் உள்ள சமூக அமைப்புகளுடனும் CSS நெருக்கமாக பணியாற்றுகிறது.

பொறுப்புத் துறப்பு அறிவிக்கை: இந்த வெளியீடு பொதுவான தகவல் வழங்கும் நோக்கத்துடன் மட்டுமே தயாரிக்கப்பட்டுள்ளதேயன்றி, சட்ட ஆலோசனைக்கு மாற்றாக அல்ல. உங்களின் வழக்கு குறித்து சட்ட ஆலோசனை தேவைப்பட்டால் ஒரு வழக்கறிஞரைக் கலந்தாலோசிக்க வேண்டும். இந்த வெளியீட்டின் பொருளடக்கத்திலிருந்து மற்றும் அதன் தொடர்பாக எழும் ஏதேனும் மற்றும் எல்லாப் பொறுப்புகளிலிருந்தும் அரசு நீதிமன்றங்கள் மறுப்புரிமை பெற்றுள்ளன.

எல்லாத் தகவல்களும் **1 மார்ச் 2023** தேதிப்படி சரியானவை.

**அரசு நீதிமன்றங்கள்**
1 ஹெவ்லாக் சதுக்கம்
சிங்கப்பூர் 059724
தொலைபேசி எண்: 6 JUSTICE (65878423)
www.judiciary.gov.sg